ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302

# நீதிமானாக்கப்படுதலும், பரிசுத்தமாக்கப்படுதலும்

**முன்னுரை :**

இப்பாடத்தில் நாங்கள் செய்ய விரும்புகின்ற காரியம், போதனையைத் தெளிவாக உங்களுக்கு விளங்கப்பண்ணுவதே. இரட்சிப்போடு இணைந்துள்ள மிக முக்கியமான போதனைகளாகிய மீட்பு, ஒப்புரவாகுதல், பாவநிவர்த்தி, சுவிகாரபுத்திரம் இவைகளை நன்கு அறிந்துகொள்ளாவிட்டால் இரட்சிப்பின் ஆசீர்வாதத்தை முழுமையாக அனுபவிக்க முடியாது.

இந்த சத்தியங்களை படிக்கும்பொழுது உங்களுக்குச் சோர்வு இருக்கக்கூடாது. இந்த சத்தியங்கள் முழுவதும் அறிந்து அவற்றை உங்களது நடைமுறை வாழ்க்கையில் பயிற்றுவிக்க வேண்டும். நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல் என்பதின் பொருளையும், முக்கியத்துவத்தையும் உங்களுக்குத் தெளிவாக போதிக்க விரும்புகிறோம். இந்த சத்தியங்கள் உங்களது ஆத்துமாவை சந்தோஷத்தினால் நிரப்பும்.

## இந்தப் பாடத்தின் முக்கியத்துவம் :

சூகியனான பில்தாத் கேட்ட கேள்வி இன்றைக்கும் மனிதர்களை வியப்படையச் செய்கிறது. அதாவது, மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருப்பது எப்படி? (யோபு 25:4). சட்டத்தை மீறுகிற, கிறிஸ்துவை மறுதலிக்கிற, தேவனை எதிர்க்கிற, தேவ கோபாக்கினைக்கு உட்பட்டிருக்கிற ஒரு பாவி விடுதலையாக்கப்பட்டு, நீதிமானாக்கப்படுவது எப்படி? அப்படி ஒரு பாவி நீதிமானாக்கப்படுவானென்றால், அதைவிட குறிப்பிடத்தகுந்த நல்ல செய்தி எந்த ஒரு மனிதனும் கேட்கமுடியாது. இப்பாடத்தில் குறிப்பிடத்தகுந்த அந்த நல்ல செய்தி அடங்கியுள்ளது. நீதிமானாக்கப் படுதல் நிலையானது. ஆனால் பரிசுத்தமாக்கப்படுதல் நடைமுறை வாழ்க்கையில் அனுபவிக்கிற ஒன்றாகும். நீதிமானாக்கப்படுதல் தேவன் நம்மைக் குறித்து என்ன அறிவிக்கிறார்? எப்படி பார்க்கிறார்? என்பதைக் காட்டுகிறது. பரிசுத்தமாக் கப்படுதல் என்பது அனுதின ஜீவியத்தில், பரிசுத்தத்தில் வளர்ந்து கொண்டே போவதைக் குறிக்கிறது. இவை இரண்டையும் குறித்து இப்பாடத்தில் பார்க்கப் போகிறோம்.

**பாடம்**

## I. நீதிமானாக்கப்படுதல் :

**அ. பொருள் :**

1. பொதுவாக ஓர் குற்றவாளி நீதிமன்றத்தில் நிறுத்தப்படும்போது, நீதிபதி அவனை விசாரித்து அவன் 'நிரபராதி' அல்லது 'நீதிமான்' என்று தீர்ப்புக் கூறும்பொழுது அவன் நீதிமானாக நீதிமன்றத்தைவிட்டு வெளியே போக முடியும்.

   இதுபோலவே ஓர் பாவி தேவனுக்கு முன்பாக குற்றம் சாட்டப்பட்டவனாக இருந்தபோதிலும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அவனை 'நிரபராதி' அல்லது 'நீதிமான்' என்று தீர்ப்புக் கூறுகிறார். இதுவே 'நீதிமானாக்கப் படுதல்' என்பதின் கருத்தாகும்.

**கிரேக்கு வார்த்தைகள் :**

வினைச்சொல் – 'DIKAIOO' (டிக்காயோ) – நீதிமான் என்று அறிவிக்கப்படுதல்.

பெயர்ச்சொல் – 'DIKAIOSUNE' (டிக்காயோசேன்) – நீதிமானாக்கப்படுதல்.

பெயரெச்சம் – 'DIKAIOS' (டிக்காயோஸ்) – நீதிமான் அல்லது நீதிமானாக்கப்பட்டான்.

2. நீதிமானாக்கப்படுதல் என்ற வார்த்தை இரண்டு பொருள்களை உடையதாக இருக்கிறது.
   i) சகல பாவங்களிலிருந்தும் மன்னிப்பு ரோமர் 8:1,2,33; அப்.13:38, 39.
   ii) தேவனுடைய நீதி கொடுக்கப்பட்டு அவருடைய சகல ஆசீர்வாதங் களுக்கும் உரியவனாக மாற்றப்படுதல் – ரோமர் 3:22; 4:5.
3. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் நாம் விசுவாசம் வைக்கும்பொழுது பிதாவாகிய தேவன் நம்மை கிறிஸ்துவின் பலிமரணத்தின் அடிப்படையில் நீதிமான்கள் என்று அறிவிக்கிறார்.

இன்னொரு விதத்தில், நாம் இரட்சிப்புக்காக கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை வைக்கும்பொழுது பிதாவாகிய தேவன் எப்படி நம்மைக் காண்கிறார் என்பதை வெளிப்படுத்தக் கூடியதாயிருக்கிறது. ஆதாம் பாவம் செய்த பொழுது தேவனோடு இருந்த உறவு முறிக்கப்பட்டது. அந்த உறவு மறுபடியும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் புதுப்பிக்கப்படுகிறது.

4. பாவிகளாகிய நாம் இரட்சிக்கப்படும்பொழுது கிறிஸ்து நமது இடத்தையும் நாம்கிறிஸ்துவின் இடத்தையும் எடுத்துக் கொள்ளுகிறோம்.
   i) கிறிஸ்து நமக்காகப் பாவமானார். நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்.
   ii) நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2 கொரிந்தியர் 5:21).
5. நீதிபதியாகிய தேவனிடத்திலிருந்து மன்னிப்பை மாத்திரம் பெறுவது 'நீதிமானாக்கப்படுதல்' அல்ல. ஆதாம் செய்த பாவத்தின் மூலம் மனிதன் இழந்துபோன உரிமைகளையும், உறவையும் பழைய நிலைக்குக் கொண்டுவருவதே நீதிமானாக்கப்படுதல் என்பதாகும்.
6. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் ஒரு பாவி விசுவாசம் வைக்கும் பொழுது அவருடைய நீதி அவனை மூடி மறைத்துக்கொள்கிறது. நீதியுள்ள தேவன் அவருடைய (கிறிஸ்துவினுடைய) நீதியின் அடிப்படையில் அவனைக் குற்றவாளி அல்ல என்று தீர்ப்புக் கூறுகிறார் (ரோமர் 8:1).

**ஆ. நாம் யாருடைய வார்த்தையின் அடிப்படையில், எந்த உரிமையின் அடிப்படையில் 'குற்றவாளிகள் அல்ல, நீதிமான்களே' என்று தீர்க்கப்படுகிறோம்?**

பதில்: தேவனே நம்மை நீதிமான்களாக்குகிறவர் (ரோமர் 3:26, 30; 8:33).

**இ. நாம் நீதிமான்களாக்கப்படுவதற்கு மூலகாரணமாயிருப்பது எது?**

பதில்: கிருபை (தீத்து 3:6; கலாத்தியர் 5:4; ரோமர் 3:24). தகுதியற்ற ஒரு பாவிக்கு கிறிஸ்துவுக்குள் அளிக்கப்படும் ஈவே கிருபை ஆகும்.

**ஈ. எதன் மூலமாக?**

நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 5:9; எபிரெயர் 9:22). கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள் (ரோமர் 3:24).

நீதிமானாக்கப்படுதல் என்பது மலிவான, மதிப்பற்ற ஒன்றல்ல. கிறிஸ்து அதற்கான கிரயத்தைச் செலுத்தியிருக்கிறார். பழைய ஏற்பாட்டு காலத்தில் பிரதான ஆசாரியன் தனக்காகவும், இஸ்ரவேல் ஜனங்களின் பாவங்களுக்காகவும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள கிருபாசனத்தண்டையில் ஆண்டிற்கொருமுறை இரத்தம் தெளிப்பான். ஆனால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காகத் தம்முடைய சொந்த இரத்தத்தை ஒரேதரம் சிந்தியிருக்கிறார். தேவன் தம்முடைய குமாரனின் பலி மரணத்தின் மூலமாக நம்மை நீதிமான் களாகக் கணக்கிட்டிருக்கிறார் (ரோமர் 3:26).

**உ. நீதிமானாக்கப்படுதல் எப்படி முற்றுப்பெற்றதாகும்?**

1. மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே பாவத்தினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக்கூடாதிருந்தது. கிறிஸ்துவுக்குள் அவரை விசுவாசிக்கிறவன் எவனும் பாவத்தினின்று விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் (அப்போஸ்தலர் 13:38, 39; ரோமர் 8:2, 3).
2. அவர் நம்மை சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டார் (தீத்து 2:14).
3. கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணி னார் (ஏசாயா 53:6)
4. அவருடைய (கிறிஸ்துவினுடைய) நீதி நமக்குக் கொடுக்கப்பட்டது (ரோமர் 3:22)

**ஊ . எந்த அடிப்படையில் நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்?**

1. கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் (கலாத்தியர் 2:15; 3:8, 11; ஆபகூக் 2:4; ரோமர் 1:17; எபிரெயர் 10:38).
2. ஒரு மனிதன் இரக்கம் கொண்டவனும், குடும்பத்தை நன்கு விசாரிக்கிறவனும், மனைவியினிடத்தில் அன்பு செலுத்துகிறவனும், சமுதாயத்தில் உத்தமனுமாய் இருக்கிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். அப்படியிருந்தும் அவன் நீதிமானாக கணக்கிடப்படுவதில்லை. ஏன்?
   i) எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானபடியினால் ஒருவனையும் தேவன் நீதிமானாகக் காண்கிறதில்லை (ரோமர் 3:23; ஏசாயா 53:6; 64:6).

ii) கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (எபேசியர்2:8,9). அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும் (ரோமர் 4:5).

iii) எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப் படுவதில்லை (ரோமர் 3:20). நியாயப்பிரமாணம் பாவத்தைச் சுட்டிக்காட்டி நம்மை குற்றவாளிகள் என்று தீர்க்கிறது. ஆனால் பாவத்திலிருந்து விடுதலையைக் கொடுப்பதில்லை (ரோமர் 3:19).

iv) நியாப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகள் எல்லாம் செய்யப்பட வேண்டும் (கலாத்தியர் 5:3).

v) ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல (ரோமர் 4:2; எபேசியர் 2:9).

vi) நியாயப்பிரமாணத்தினாலோ, கிரியைகளினாலோ நாம் நீதிமான்களாக்கப்படாமல் கிருபையினாலும், விசுவாசத்தினாலும் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்.

**எ. நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்பதற்குள்ள நிச்சயம் என்ன?**

உயிர்த்தெழுதல் (ரோமர் 4:25). நமது நம்பிக்கை கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. 1 பேதுரு 1:4, கர்த்தராகிய கிறிஸ்து நமக்காக செய்துமுடித்த காரியத்தில் தேவன் திருப்தியடைந்தார் என்பதற்கு உயிர்த்தெழுதல் அத்தாட்சியாக இருக்கிறது.

**ஏ. நீதிமானாக்கப்படுதலின் மூலம் ஏற்படக்கூடிய விளைவு :**

1. இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற படியால் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் (ரோமர் 5:1; கொலோசெயர் 1:20,21). பகைமை நீக்கப்பட்டு, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாய் சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. தேவனோடு உறவு கொள்ள முடியாமல் தடையாக இருந்த பாவச்சுவர் தகர்த்து எறியப்பட்டது. இப்பொழுது தேவனோடு சமாதானம் பெற்றிருக்கிறோம்.
2. கோபாக்கினை இல்லை (என்றைக்கும் இல்லை)

   i) குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் (யோவான் 3:36).

   ii) கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே (ரோமர் 5:9; 1 தெசலோனிக்கேயர் 5:9).
3. நற்கிரியைகள்: நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் (எபேசியர் 2:10). நற்கிரியைகளின் மூலம் ஒருவர் நீதிமானாகக் கணக்கிடப்படுவதில்லை. ஆனால் நீதிமானாகக் கணக்கிடப் பட்டவர் நற்கிரியைகளைச் செய்கிறார் (கலாத்தியர் 5:6).

   யாக்கோபு 2–ம் அதிகாரம் வசனம் 14 முதல் 20 வரை படித்துப் பாருங்கள். இங்கே யாக்கோபு நீதிமானாக்கப்பட்ட ஒரு நபரின் வாழ்க்கையில் ஏற்படுகிற மாறுதல்களையும், கனிதரும் வாழ்வையும் குறித்துப் பேசுகிறார். இது மெய்யான விசுவாசத்தினால் உண்டாகும் நற்கிரியைகளைக் குறிக்கிறது. ஒரு மனிதன் நற்கிரியைகளினாலே நீதிமானாக்கப் படுவதில்லை என்பது உண்மை யானாலும் கிரியை இல்லாத விசுவாசம் செத்ததாக இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் நிருபத்தில் விசுவாசத்தினால் நீதிமானக்கப் படுகிறோம் என்று கூறுகிறார் (ரோமர் 4:5). விசுவாசத்தை தேவன் மாத்திரமே காணமுடியும். யாக்கோபு தமது நிருபத்தில் (யாக்கோபு 2:22) கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று எழுதுகிறார். மனிதன் நமது கிரியைகளினாலே நமது விசுவாசத்தைக் காண்கிறான். கிரியைகளினால் மாத்திரமே நமது விசுவாசத்தைக் காண்பிக்க முடியும். அது இல்லையானால் விசுவாசம் செத்ததாக இருக்கிறது.
4. மகிமை :

   i) நாம் சுதந்தரராகத்தக்கதாகக் கிருபையினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் (தீத்து 3:6; ரோமர் 8:17).

   ii) 1 யோவான் 3–ஆம் அதிகாரம் 2–வது வசனத்தில் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம் என்று வாசிக்கிறோம். சபை எடுத்துக் கொள்ளப்படும் பொழுது அல்லது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிர்த்தெழும் பொழுது எப்படி இருப்போமோ, அப்படியே தேவன் இப்போதே நம்மைப் பார்க்கிறார்.

   iii) கிறிஸ்துவோடு நாம் பங்கிடப்போகிற மகிமையை தேவனுடைய பார்வையில் நாம் ஏற்கனவே சுதந்தரித்து விட்டோம். ரோமர் 8:30–ல் "எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக் கிறார்" என்று வாசிக்கிறோம்.

**ஐ. தேவனுடைய பார்வையில் நாம் எப்படி நீதிமான்களாக்கப்படுகிறோம்?**

சுருக்கமாகக் கூறினால்,

1. ரோமர் 3:20–ல் எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தவனுக்கு முன்பாக நீதிமானாக்கப் படுவதில்லை என்று பார்க்கிறோம்.
2. ரோமர் 3:26–28 வரை வாசித்துப் பார்ப்போமென்றால் மனுஷன் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப் படுகிறான், கிரியைகளினால் அல்ல என்று பார்க்கிறோம்.

## II. பரிசுத்தமாக்கப்படுதல் :

**அ. பொருள் :**

1. பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் 'பரிசுத்தமாக்கப்படுதல்' என்ற பதத்தின் பொருள் 'தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்படுதல்' என்பதாகும்.
2. பழைய ஏற்பாட்டில் எபிரெய பாஷையில் (கோடேஷ் – QODESH) என்பதன் அடிப்படைப் பொருள் 'பிரித்தெடுக்கப்பட்ட' அல்லது 'பரிசுத்தமாக ஆக்குதல்' என்பதாகும்.
3. புதிய ஏற்பாட்டில் கிரேக்க வார்த்தை 'ஹேகியோஸ்' (HAGIOS) என்பதன் அடிப்படைப் பொருள் 'பரிசுத்தம்', 'பரிசுத்தமான', 'பரிசுத்தமாக்கப்படுதல்' என்பதாகும்.
4. பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இவ்வார்த்தைகள் மக்களையும், பொருளையும் குறிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டது.
   1. பழைய ஏற்பாட்டில் சில உதாரணங்கள் :
      - i) ஆதியாகமம் 2;3–ல் ''தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்'' என்று வாசிக்கிறோம்.
      - ii) யாத்திராமகம் 19:23–ல்'மலையைச் சுற்றிலும் எல்லை குறித்து, அதைப் பரிசுத்தப்படுத்துங்கள்' என்று வாசிக்கிறோம்.
      - iii) 'ஒருவன் தன் வீட்டைக் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டால்' என்று லேவியராகமம் 27:14–ல் பார்க்கிறோம்.
      - iv) யோசுவா 7:13–ல் 'ஜனங்களை பரிசுத்தம் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.'
      - v) யாத்திராகமம் 29:36–ல் ''அந்தப் பலிபீடத்தை பரிசுத்தப்படுத்த வேண்டும்'' என்று வாசிக்கிறோம்.
      - vi) யாத்திராகமம் 29:44–ல் ''எனக்கு ஊழியம் செய்யும்படிக்கு ஆரோனையும், அவன் குமாரரையும் பரிசுத்தப்படுத்துங்கள்'' என்று பார்க்கிறோம்.

      'தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட' என்பதே இதன் அடிப்படைப் பொருள். பரிசுத்தமாக்கப்படுதலை குறிப்பதோடு, பிரதிஷ்டை செய்தல், அர்ப்பணம் செய்தல் என்ற கருத்தையும் குறிக்கக்கூடியதாய் இருக்கிறது.''''
   2. புதிய ஏற்பாட்டில் சில உதாரணங்கள் :
      - i) மத்தேயு 23:17, 19 வசனங்களில் நாம் இவ்விதமாய் வாசிக்கிறோம் : ''மதிகேடரே, குருடரே, எது முக்கியம்? பொன்னோ, பொன்னைப் பரிசுத்தமாக்குகிற தேவாலயமோ? மதிகேடரே, குருடரே! எது முக்கியம்? காணிக்கையோ, காணிக்கையைப் பரிசுத்தமாக்குகிற பலிபீடமோ?''
      - ii) 1 தீமோத்தேயு 4:5–ல் அது தேவ வசனத்தினாலும், ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும் என்று வாசிக்கிறோம்.
      - iii) ''அவிசுவாசியான புருஷன் (விசுவாசியாகிய) தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான். அவிசுவாசியான மனைவியும் தன் (விசுவாசியாகிய) புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள்'' என்று 1 கொரிந்தியர் 7:14–ல் பார்க்கிறோம்.
      - iv) கிறிஸ்துவானவர் பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார் என்று யோவான் 10:36–ல் வாசிக்கிறோம்.

v) கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள் என்று 1 பேதுரு 3:15–ல் வாசிக்கிறோம். எல்லா வசனங்களிலும் இதனுடைய பொருள் ஒன்றே. அதாவது ''தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட'' என்பதாகும்.

5. 'பரிசுத்தம்' என்ற வார்த்தையை பொருள்களுக்குப் பயன்படுத்தும் பொழுது உள்ளான நல்நடத்தையின் தன்மையைக் குறிப்பதில்லை (உதாரணம் : பரிசுத்த அப்பம், பரிசுத்த மேஜை). ஆனால் மனிதர்களுக்கு இப்பதத்தைப் பயன்படுத்தும் பொழுது பின்கண்ட மூன்று நிலைகளில் பொருள்படுகிறது :

**i. நிலையில் :**

1. அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய எபேசியர் நிருபத்தில் விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறதாகக் குறிப்பிடுகிறார். 'கிறிஸ்துவுக்குள்' என்ற இப்பதமானது ஏறக்குறைய 28 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவுக்குள் என்பது நமது நிலையைக் குறிக்கிறது.
2. விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார்கள். பரிசுத்தவான்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள் (1 கொரிந்தியர் 1:2,30; எபேசியர் 1:1; பிலிப்பியர் 1:1; கொலோசெயர் 1:2).
3. எபிரெயர் 10:10–ல் இவ்விதமாய் வாசிக்கிறோம், ''இயேசுகிறிஸ்துவினு டைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்.''

**ii. நடைமுறை வாழ்க்கையில் :**

விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் வளருகிறோம் (2 பேதுரு 3:18).

1. திருவசனத்தின் மூலமாய் பரிசுத்தமாக்கப்படுகிறோம் (யோவான் 17:17; எபேசியர் 5:26).
2. ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம் (2 கொரிந்தியர் 3:18).
3. சமாதானத்தின் தேவன்தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக (1 தெசலோனிக்கேயர் 5:23).

**iii. பரிபூரணமடைதல் :**

கிறிஸ்து வெளிப்படும்பொழுது நாம் பரிபூரணராக்கப்படுவோம்.

1. 1 கொரிந்தியர் 15:51–56–ல் ''அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவான இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்'' என்று பார்க்கிறோம்.
2. ''அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்'' என்று 1 யோவான் 3:2–ல் வாசிக்கிறோம்

**ஆ. ஒரு விசுவாசி எப்பொழுது பரிசுத்தமாக்கப்படுகிறான்? (நிலையின்படி)**

1. நிலையின்படி (Positionally) கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைக்கும் அக்கணமே நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம் (அப்போஸ்தலர் 26:18).

   கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம் (1 கொரிந்தியர் 1:2). கர்த்தராகிய கிறிஸ்துவே நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார் (1 கொரிந்தியர் 1:30,31).
2. ஆயினும், அனுபவ ரீதியாக, நடைமுறையில் நாம் அதிகம் அதிகமாக கர்த்தருக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்களாயும், அதிகம் அதிகமாக பரிசுத்தமாக்கப்பட்டுக் கொண்டேயும் வருகிறோம்.

   i) ''நம்மை சுத்திகரித்துக் கொண்டு பரிசுத்தமாகுதலைத் தேவ பயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்'' என்று 2 கொரிந்தியர் 7:1–ல் வாசிக்கிறோம்.

   ii) ''தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்'' என்று 1 தெசலோனிக்கேயர் 4:7–ல் வாசிக்கிறோம்.

   iii) ''இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்'' (ரோமர் 6:19,20).

   iv) ''கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு அவர் சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்'' (எபேசியர் 4:11,13).

**இ. நாம் எவ்வாறு பரிசுத்தமாக்கப்படுகிறோம்? (நடைமுறையில்)**

1. இயேசுகிறிஸ்துவின் சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச்சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம் (எபிரெயர் 10:10,29).

2. கிறிஸ்துவின் மாதிரியை பின்பற்றுவதின் மூலமாக நாம் பரிசுத்தமாக்கப் படுகிறோம் (எபேசியர் 4:20; பிலிப்பியர் 2:5).
3. தேவனுடைய வசனத்தின் முலமாக நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம் (யோவான் 17:17; எபேசியர் 5:26).
4. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம்.
   i) நாம் பரிசுத்தமாக்கப்படுவதற்கு பரிசுத்த ஆவியானவரே உதவி செய்கிறவராக இருக்கிறார் (1 பேதுரு 1:2; 2 தெசலோனிக்கேயர் 2:15; ரோமர் 15:16).
   ii) பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைக் கொண்டே நாம் பரிசுத்தம் அடைகிறோம். ஏனென்றால் அவரே நம்மை பரிசுத்தப்படுத்துகிறவர். (ரோமர் 8:13; எபேசியர் 3:16; கலாத்தியர் 5:16).

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்கு முன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்துகொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# நீதிமானாக்கப்படுதலும், பரிசுத்தமாக்கப்படுதலும்

ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி

இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.

[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. நீதிமானாக்கப்படுதலின் இரண்டு காரியங்கள் எவை ?
   a. பாவ மன்னிப்பு
   b. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்
   c. சர்வலோக சபையில் அங்கமாகுவது
   d. தேவநீதி கொடுக்கப்படுகிறது
2. நீதிமானாக்கப்படுதல் என்றால் என்ன ?
   a. ஒருவர் நீதிமானாக மாற்றப்படுகிறார்
   b. ஒருவர் பரிசுத்தமாக்கப்படுகிறார்
   c. ஒரு பாவி தேவனிடம் விசுவாசம் வைக்கும்போது நீதிமானாக எண்ணப்படுகிறார்
3. நீதிமானாக்கப்படுதல் விசுவாசிக்கு எவ்விதம் தொடர்புள்ளது ?
   a. ஆவிக்குரிய நிலை
   b. கிறிஸ்துவுக்குள் விசுவாசியின் நிலை
   c. பரிசுத்தமாக்கப்படுதல்
4. கிறிஸ்துவுக்குள் ஒரு விசுவாசிக்குக் கிடைத்த மாற்றத்தின் விளைவாக நீதிமானாக்கப்படுதல் கிடைத்திருக்கிறது. இந்த உண்மையை எந்த வசனத்தில் பார்க்கிறோம் ?
   a. 2 கொரிந்தியர் 5:17
   b. 2 கொரிந்தியர் 5:21
   c. ரோமர் 8:1
5. நீதிமானாக்கப்படுதல் எதன் மூலம் கிடைத்தது ?
   a. கிறிஸ்துவின் பிறப்பு மூலம்
   b. கிறிஸ்துவின் மீட்பின் பணி மூலம்
   c. கிறிஸ்துவின் பரமேறுதல் மூலம்
6. நீதிமானாக்கப்படுவதினால் ஏற்படும் நன்மை என்ன ?
   a. நமது பாவங்கள் தேவனால் மன்னிக்கப்படவில்லை
   b. தேவனோடு சரியான உறவில் கொண்டு வரப்படுதல். அதாவது பாவத்தின்மூலம் இழந்துபோன உறவையும், உரிமைகளையும் பெற்றுக்கொள்வது
   c. மறுபடியும் பாவம் செய்யாத நிலைக்கு ஒருவர் மாறுவது
7. நீதிமானாக்கப்படுதலைப் பெறும் வழி எது ?
   a. நமது கிரியை    b. விசுவாசம்    c. விசுவாசமும், கிரியையும்

8. நீதிமானாக்கப்படுவதற்கு மூலகாரணமாயிருப்பது எது ?
   a. தேவகிருபை
   b. தேவ அன்பு
   c. தேவநீதி
9. நமது உயிர்த்தெழுதலுக்கு எது உறுதி கொடுக்கிறது ?
   a. கிறிஸ்துவின் பரமேறுதல்
   b. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்
   c. கிறிஸ்துவின் சிலுவை மரணம்
10. 'பரிசுத்தமாக்கப்படுதல்' என்ற வார்த்தையின் பொருள் என்ன ?
    a. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்
    b. தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்படுதல்
    c. தேவனை சேவிப்பது
11. பரிசுத்தமாக்கப்படுதலின் கருத்து எதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது ?
    a. மக்கள் மட்டும்
    b. பொருள்கள் மட்டும்
    c. மக்களுக்கும், பொருளுக்கும்
12. கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப்படுதல் என்றால் என்ன ?
    a. கிறிஸ்துவின் வருகையில் நாம் பெறப்போகும் சரீர மீட்பினால் உண்டாகும் பரிபூரணத்தைக் குறிப்பிடுவதாகும்.
    b. கிறிஸ்துவுக்குள் ஒரு விசுவாசியின் நிலையை குறிப்பிடுவதாகும்.
    c. ஒரு விசுவாசி கிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் ஏற்படும் ஆவிக்குரிய வளர்ச்சியைக் குறிப்பிடுவதாகும்.
13. நடைமுறை வாழ்க்கையில் பரிசுத்தமாக்கப்படுதல் என்றால் என்ன ?
    a. கிறிஸ்துவின் வருகையில் நாம் பெறப்போகும் சரீர மீட்பினால் உண்டாகும் பரிபூரணத்தைக் குறிப்பிடுவதாகும்.
    b. கிறிஸ்துவுக்குள் ஒரு விசுவாசியின் நிலையை குறிப்பிடுவதாகும்.
    c. ஒரு விசுவாசி கிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் ஏற்படும் ஆவிக்குரிய வளர்ச்சியைக் குறிப்பிடுவதாகும்.
14. கிறிஸ்து வெளிப்படும் பொழுது ஏற்படும் பரிசுத்தமாக்கப்படுதல் எதை குறிக்கிறது ?
    a. கிறிஸ்துவின் வருகையில் நாம் பெறப்போகும் சரீர மீட்பினால் உண்டாகும் பரிபூரணத்தைக் குறிப்பிடுவதாகும்.
    b. கிறிஸ்துவுக்குள் ஒரு விசுவாசியின் நிலையை குறிப்பிடுவதாகும்.
    c. ஒரு விசுவாசி கிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் ஏற்படும் ஆவிக்குரிய வளர்ச்சியைக் குறிப்பிடுவதாகும்.
15. ஒரு நபர் எப்பொழுது (நிலையின்படி) பரிசுத்தமாக்கப்படுகிறார் ?
    a. ஞானஸ்நானம் எடுக்கும் பொழுது
    b. விசுவாசியாக மாறும் பொழுது
    c. அந்நியபாஷை பேசும் பொழுது

16. தொடர்ச்சியான பரிசுத்தமாக்கப்படுதலை ஒரு விசுவாசி எப்பொழுது அனுபவிக்கிறார் ?
    a. பரலோகத்திற்கு செல்லும் பொழுது
    b. கிறிஸ்துவை விசுவாசிக்கும் பொழுது
    c. கிறிஸ்துவுக்குள் வளரும் பொழுது

17. **நிரப்புக :–** யோபு 25:4–ல், பில்தாத் கேட்ட மிகப்பெரிய கேள்வி எது ?

    ---------------------------------------------------------------------------------------------------

18. விசுவாசியின் பரிசுத்தமாக்கப்படுதலில் உதவியாக செயல்படுபவர் யார் ?

    ---------------------------------------------------------------------------------------------------

19. **பொருத்துக :–** நல்ல மனிதன் நீதிமானாக்கப்படுவதில்லை, அதற்கான காரணத்தைக் கொடுக்கவும் (சரியான வசனத்தை வார்த்தைக்கு முன் எழுதவும்)

| | | |
|---|---|---|
| ------------ | தேவனின் பார்வையில் ஒருவரும் நீதிமானாக இல்லை | a. எபேசியர் 2:8 |
| ------------ | இரட்சிப்பு கிரியைகளினால் அல்ல, கிருபையினாலே | b. கலாத்தியர் 3:10 |
| ------------ | கிரியை அல்லது நியாயப்பிரமாணம் ஒருபோதும் ஒரு மனிதனை நீதிமானாக்காது | c. ரோமர் 3:23 |
| ------------ | நியாயப்பிரமாணம் பரிபூரண கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறது | d. எபேசியர் 2:9 |
| ------------ | மனிதன் பெருமை பாராட்டுவதற்கு ஏதுவாகும் | e. ரோமர் 3:20 |

20. **பொருத்துக :–** நீதிமானாக்கப்படுதலின் **நான்கு** விளைவுகள் என்ன ? (சரியான வார்த்தையை வசனத்திற்கு முன்பு எடுத்து எழுதவும்)

| | | |
|---|---|---|
| ------------ | ரோமர் 5:1 | a. கோபாக்கினை இல்லை |
| ------------ | ரோமர் 5:9 | b. நற்கிரியைகள் |
| ------------ | எபேசியர் 2:10 | c. தேவனோடு சமாதானம் |
| ------------ | ரோமர் 8:30 | d. மகிமை |

---

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ____________________________________________

**முகவரி :** ____________________________________________

____________________________________________